உ

கடவுள் துணை.

# முன்மொழிக் கொத்து

(மூன்றும் வகுப்புக்கு.)

---

இஃது

அம்பாசமுத்திரம் தாலூகா

காருகுறிச்சி

முத்தமிழ் வித்தியாசாலை,

அடுக்குமொழி

பி. ஆவுடையப்பன் செட்டியார்,

எழுதியது.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 APR 1927
MADRAS

...சமுத்திரம்

...பதிப்பிக்கப்பெற்றது.

(...திப்பு.)

(அணா. 1.

TB
O-,1x(30
M27.
183620

## முக்கிய கவனிப்பு.

இப்புஸ்தகம், ஆரம்பப்பாடசாலை மாணவர் ம
கள் உபபாடமாக, உலகில் வழங்கும் பழமொழ்களில
நாலு சிருள்ளதை மாத்திரம் சிறிது சேர்த்து எழுதப்
பட்டது.

அடுக்குமொழி,
பி. ஆவுடையப்பன்செட்டியார்,
மானேஜர்,
முத்தமிழ் வித்தியாசாலை.



புத்தகம் கிடைக்குமிடம்.

பி. நா. சிதம்பரமுதலியார் & பிரதர்ஸ்,
சுவாமி சன்னதி,
திருநெல்வேலி.

சிவக்கொழுந்து செட்டியார்,
இந்துஎலிமெண்டரி பாடசாலை,
திருநெல்வேலி.

முத்துசாமியாபிள்ளை,
தமிழ் பாடசாலை,
பத்தமடை.

பி. ஆவுடையப்பன்செட்டியார்,
காருகுறிச்சி.

உ

கடவுள் துணை.

# முன்மொழிக்கொத்து.

(மூன்றாம் வகுப்புக்கு)

---

இஃது

அம்பாசமுத்திரம் தாலூகா

காருகுறிச்சி,

முத்தமிழ் வித்தியாசாலை,

அடுக்குமொழி

பி. ஆவுடையப்பன் செட்டியார்,

எழுதியது.

---

(முதற்பதிப்பு.)

இதன் விலை) —— (அணா. 2.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 APR 1927
MADRAS

அகஸ்தியர் பிரஸ், அம்பாசமுத்திரம்.
முதற் பதிப்பு:. காப்பி. 2000.

உ

கணபதி துணை.



# முன்மொழிக் கொத்து.

## விநாயகர் சரஸ்பதீ துதி.

முக்கியமா முன்மொழிக்கோத்துணர
அக்கர விநாயகர் அடி போற்றுவமே
முன்மொழிக் கொத்து முறை சற்றேத
பன்மொழிச் சரஸ்பதி பாதம் நமஸ்தே.

—O—

## நூல்.

முன்மொழி வாக்கியம் முழுதும் இலாக்கியம்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

அச்சில்லாமல் தேரோடாது
அஞ்சலி வந்தனம் யாருக்கும் நன்மை
அஞ்சு பெண் பிறந்தால் அரசனும் ஆண்டி
அடாது செய்பவர் படாது படுவர்
அடை மழை பெய்தால் ஆண்டி பாடு கெடும்
அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு
அதிகாரி யுடனே எதிர் பண்ணாதே
அப்பியாச வித்தைக்கு அழிவில்லை 10
அரசனில்லாமல் படை வெட்டாது
அல்லும் பகலும் அறுபது நாழிகை
அழுதபிள்ளை பால் குடிக்கும்
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
அற்ப சிநேகம் பிராண சங்கடம்
அன்னியர் பொருளில் ஆசை வையாதே
அன்ன மயமே பிராண மயம்

ஆடையுடையான் சபைக் கஞ்சான்
ஆட்டைக்கண்டால் புலிக்கு விருப்பம்
ஆத்திரக்காரன் கோத்திரம் அறியான் 20
ஆந்தை சிறிது கீச்சுப் பெரிது

ஆபத்தும் சம்பத்தும் யாருக்குமுண்டு
ஆயிரம் கட்டு யானைப் பலம்
ஆலும் வேலும் பல்லுக்குறுதி
ஆறின கஞ்சி பழங் கஞ்சி
ஆற்றில் போடினும் அளந்து போடு
ஆனைக்குமுண்டு அவகேடு
ஆனை செத்தாலும் ஆயிரம் பொன்
இகழ்ச்சியுடையோன் புகழ்ச்சியடையான்
இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை 30
இடுவது பிச்சை பெறுவது மோட்சம்
இண்டஞ் செடியில் தலையைக் கொடாதே
இரவற்காரி இருந்தழ வொட்டாள்
இரும்பும் துரும்பும் இருக்கக் கெடும்
ஈச்ச மரத்தின் இலை யுதிராது
ஈரச் சேலையில் அழுக்கேறும்
ஈனரை யடுத்தால் மானம் அழியும்
உடம்புக்கு இரண்டு காக்குண்டு
உடைந்த சங்கில் ஊத்து வராது
உண்ட மயக்கம் தொண்டர்க்குமுண்டு 40

உண்டார் மேனி கண்டால் தெரியும்
உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
உத்தம சேவகன் பெற்றதாய்க் கதிகம்
உத்தியோகம் புருஷ லட்சணம்
உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்
உலோபிக்கு இரட்டைச் செலவுண்டு
உறங்கின நரிக்கு உணவு கிட்டாது
உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்

ஊசியின் காதில் ஒட்டகம் நுழையுமா
ஊணுக்கு முந்து வேலைக்கு பிந்து 50
ஊமையாயிருந்தால் செவிடுமுண்டு
ஊர் வாயைமூட உலைமூடியில்லை

எதார்த்த வாதி வெகுஜன விரோதி
எலியழுதாலும் பூனை விடாது
எலும்பில்லா நாக்கு எல்லாம் பேசும்
எழுதா விதிக்கு அழுதால் தீருமா
எறும்பு ஊரக் கல்லுந் தேயும்
எந்நாள் இருப்பினும் இறப்பது நிச்சயம்
ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகாது

ஏழைப்பிள்ளைக்கு தெய்வமே துணை
ஏணியை வைத்து மாடியிலேறு
ஐயப்பட்டால் பைய நட
ஐயாண்டளவில் மையேடு கைப்பிடி
ஒட்டுத்திண்ணை நித்திரைக்கேடு
ஒருவூர்ப் பேச்சு ஒருவூர்க் கேச்சு
ஒரு காசு பேணின் இரு காசு தேறும்
ஒருகை தட்டினால் ஓசையெழும்புமா
ஒன்றே செயினும் நன்றே செய்
ஓட்டைப்பாத்திரம் ஒழுக்கைக் காட்டும்
ஔவையார் வாக்குக்கு அழிவில்லை
கடுகு சிறுக்கினும் காரம் விடாது
கண் குருடாயினும் நித்திரை உண்டு
கந்தையாயினும் கசக்கிக் கட்டு
கருடனைக்கண்டால் கைப்பொருள் சேரும்
கரைப்பவன் கரைத்தால் கல்லுங் கரையும்
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
கல்விக்கிருவர் களவுக்கொருவர்
களச்சிக்காய் திருநீற்றில் ஓட்டாது

கற்றவன் பெரியவன் மற்றவன் சிறியவன்
கன்மமின்றிச் ஜென்மமில்லை 80
காணி சோம்பல் கோடி வருத்தம்
காதுக்கிட்டால் முகத்துக்கழகு
காய்த்த மரத்தில் கல்லெறிபடும்
காலத்துக்கேற்ற கோலம் போடு
காலைக்கல்லு மாலைப்புல்லு
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
காவடிப்பாரம் சுமப்பவனறிவான்
கிட்டயிருந்தால் முட்டப்பகை
கிழவன் பேச்சு சபைக்கேறாது
கீரிக்கும் பாம்புக்கும் தீராப்பகை 90
கீழோர் யோசனை கேளாதே
குண்டுணிப்பேச்சு குடியைக்கெடுக்கும்
குருவிலா வித்தை குணமாகாது
குலத்துக்கு ஈனம் கோடாலிக்காம்பு
குலம் குப்பையில் பணம் பந்தியில்
குளறிக் குளறிக் குமரனைப்பாடு
குறையச்சொல்லி நிறைய அள

குறைவறக்கற்றவன் கோடியிலொருவன்

கூகைக்குப் பகலில் கண் தெரியாது

கூர்ந்து பார்த்தால் குதிரையுங் கழுதை 100

கூலியைக்குறைத்தால் வேலையும் கெடும்

கூழானாலும் குளித்துக்குடி

கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது

கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல

கேள்விப்பேச்சு வாழ்வைக் குலைக்கும்

கையிலில்லாதவன் கள்ளன்

கொக்கைப் பிடிக்க நாயாலாகுமா

கொடிக்குச் சுரைக்காய் கனத்துக்கிடாது

கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை

கொல்லர் தெருவில் ஊசி வில்லாது 110

கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு

கொள்ளைக்குப்போயினும் கூட்டாகாது

கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு

கோவில் விளங்கக் குடி விளங்கும்

கோழி மிதித்தால் குஞ்சு கெடாது

சகோதரனுள்ளவன் படைக்கஞ்சான்
சதுரக்கள்ளியில் அகிலுண்டாகும்
சதையுள்ள யிடத்தில் கத்தி நாடும்
சத்தியம் வெல்லும் அசத்தியம் கொல்லும்
சயமுள்ளமட்டும் பயமுண்டு
சருகைக்கண்டு நெருப்பஞ்சாது
சர்க்கரை கசப்பது வாய்க்குற்றம்
சலத்தின் தன்மை நிலத்தால் குன்றும்
சனப்பலமிருந்தால் மனப்பலமிருக்கும்
சனி புதன் எண்ணெய் தப்பாமல் முழுகு
சாண்பிள்ளையாயினும் ஆண்பிள்ளை வேண்டும்
சாதுக்கள் வார்த்தையைத் தள்ளாதே
சாப்பிட்ட பிறகே தண்ணீர் குடி
சிங்கத்துக்குப் பங்கமில்லை
சிட்டுக்குருவிக்குப் பட்டது காயம்
சிந்தின வீட்டில் செல்வங் குறையும்
சிரட்டைத் தண்ணீர் எறும்புக்குச் சமுத்திரம்
சீப்பில்லாமல் திருமணம் நிற்குமா
சீ யென்று சொன்னால் நாயோடிப்போம்

சுவருள்ளபொழுது சித்திரம் எழுது
சூதாடுவார்க்குச் சுகங்கிடையாது
சூஸ்திரமின்றிப் பொம்மை யாடுமா
செட்டி கப்பலுக்கு செந்தூரான் துணை
செட்டிக்கெதற்குச் சென்மச்சனியன்
செட்டிக்கு வேளாண்மை சென்மப்பகை 140
செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு
செயமுள்ள மட்டும் பயமில்லை
செருப்பின் அருமை வெயிலில் தெரியும்
சென்ம வியாழன் சீரைக் குலைக்கும்
சேட்டை செய்வது கேட்டைக் கொடுக்கும்
சைவாசாரம் சமயவொழுங்கு
சைவசித்தாந்த சாத்ரமீ ரேழு
சைவசமயம் தாசருக்குயர்வு
சொற்பனந்தரிசி சோறுகாது
சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளை 150
சோலியில்லார்க்கு கேலியுமுண்டு
ஞாயமுள்ளவனைத் தேயம் புகழும்

183620

தங்கமும் வெள்ளியும் சரியாகாது
தத்துவம் அறிந்தவன் தவசியாகும்
தனக்கென்றிருந்தால் சமயத்துக்குதவும்
தன்னூர்க்கு யானை அயலூர்க்குப் பூனை
தன்பலங்கொண்டு அம்பலமேறு
தன்னையறிந்தவன் தலைவனையறிவான்
தாட்சண்யம் தனம் நாசம்
தாயூட்டாச்சோற்றைத் தயிருட்டும்
தாய் மனங்கோணில் சகலமுங்கோணும்
தான் கள்ளனானால் பிறரை நம்பான்
தான் தின்ற நஞ்சு தன்னையே கொல்லும்
திக்கற்ற பேர்க்குத் தெய்வமே துணை
திங்களும் சனியும் தெற்கே நோக்கு
திருட்டு நெல்லானால் மத்தளம் மரக்கால்
தின்கிற சோற்றில் மண் போடாதே
தீட்சையின்றி மோட்சமில்லை
தீயில்லாமல் புகையெழும்பாது
தீக்கற்றவன் தேசிக்குவான் 170
தீவட்டிக்காரன் கண் தெரியாது

துஷ்டரைக்கண்டால் தூரவொதுங்கு
துள்ளும் மாடு பொதி சுமக்கும்
தூரத்துப்பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி
தூரயிருந்தால் தோட்டியும் உறவு
தென்றற் காற்றால் சீக்கும் விலகும்
தேசந்தோறும் பாஷை வேறு
தைச்சவாய் வழியே முள்ளை யெடு
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
தோணியும் ஒருக்கால் வண்டியிலேறும் 180
நண்டு கொழுத்தால் வளையிலிராது
நத்தை வயிற்றில் முத்துப் பிறக்கும்
நல்லமாடு உள்ளூரில் விற்கும்
நல்லபேரெடுக்க வெகுநாட் செல்லும்
நன்மையும் தின்மையும் நாவில் பிறக்கும்
நாகங்காணினும் நல்லார் கொல்லார்
நாய் விற்ற காசு குலையாது
நாலும் ரண்டும் சொல்லுக்குறுதி
நால்வர்கள் வாக்கே நல் வாக்கு

நாவுக்கிசைந்தால் பாவுக்கிசையும்
நாற்பது போனால் நாய்க்குச்சரி
நிழலின் அருமை வெயிலில் தெரியும்
நினைத்த நேரம் நெடுமழை பெய்யுமா
நின்று தின்றால் குன்றும் குறையும்
நீசர் குலத்தும் தாசர்களுண்டு
நீண்டெரிந்தாலும் தூண்டுகோல் வேண்டும்
நீருள்ளமட்டும் மீன்குஞ்சு துள்ளும்
நுணுக்கமதியொடு கணக்கை யெழுது
நூற்றுக்கிருப்பவர் ஐம்பதிற் சாகார்
நூற்றுக்கிருப்பினும் கூற்றுக்கிரை
நெய்கிற பேர்க்கேன் குரங்குக்குட்டி
நெல்லிக்கா யிரு நிலைமையுங்காட்டும்
நெற்றிக்கழகு நீறும் பொட்டும்
நேமம் தவறின் சேமங்குறையும்
நைடதம் புலவர்க்கு ஔடதமாகும்
நொந்த மாட்டில் ஈயுமரிக்கும்
நொறுங்கத் தின்றால் நூறு வயசு

நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்
பங்குனி வெயிலில் நடந்தவன் பாவி
பசியுள்ளபோது ருசிதெரியாது
பசுகிழடாயினும் பாற்சுவையிருக்கும்
பதறாத காரியம் சிதறாது
பதக்குக்குடித்தால் உழக்குத்தங்கும்
பக்தியுடையான் முக்திபடைவான்
பக்திக்கு முந்து படைக்குப்பிந்து
பருப்பில்லாமல் கல்யாணமுண்டா
பலநாள் களவு ஒருநாள் தெரியும்
பழகப் பழகப் பாலும் புளிக்கும்
பள்ளிக்கணக்கு புள்ளிக் காகா
பறையனைப்போல பாடுபடு
பனைவெட்டுமிடத்தில் கழுதைக்கூட்டம்
பாத்திரமறிந்து பிச்சையிடு
பாடம் ஏறினும் ஏடு கைவிடேல்
பாம்பைக்கண்டால் படையும் விலகும்
பால சோதிடம் விருத்த வைத்தியம்
பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

பானையிலிருந்தால் அகப்பையில் வரும்
பிடாரியைப் பெண்டுக்குப் பிடியாதே
பிச்சைச் சோற்றுக் கெச்சில் இல்லை
பிடிவாதபுத்தி குடிநாசமாக்கும் 230
பிரமா நினைத்தால் ஆயுள் விருத்தி
பிள்ளையின் அருமை பெற்றவளறிவாள்
பீத்தத்துருத்தியில் காற்று வராது
புதுப்பானை மீது ஈயாடாது
புலவர்க்கு வெண்பாப் புலியாகும்
புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா
புறக்கடை மருந்து கவைக்குதவாது
புளியம்பழம்போல் பொய்யுடல் வாழ்வு
பூஜைக்குப் பின்னே போஜனம் பண்ணு
பூமியைப்போலே பொறுமைவேண்டும் 240
பூனை கண்மூடிப் பாலைக்குடிக்கும்
பூனையைக்கண்டு புலியஞ்சாது
பெட்டைக்கோழி தட்டிக்கூவுமா
பெண்டுகளிருந்திடில் சண்டைகள் பெருக்கும்
பெண்ணின் கோணல் பொன்னால் நிமிரும்

பெண்புத்தி கேட்பார் பெருமையுமிழப்பர்
பெண் வளர்த்தி பீர்க்கங்காய்
பெரியோருறவு பெரும்பயனாக்கும்
பெரிய மீனுக்குச் சின்ன மீனிரை
பெருச்சாளிக்கூட்டம் வீட்டைக்கெடுக்கும் 250
பெரு நெருப்புக்கு ஈரமில்லை
பெருமாளன்றித் திருநாள் நடாது
பெருமையுடையான் சிறுமையடையான்
பெற்ற வயிறு பெருந்தீன் விரும்பும்
பெற்றதெல்லாம் பிள்ளையாகாது
பேயடிக்கப் பிள்ளை பிழைக்குமா
பேராசைப்படுவது பெருந் தரித்திரம்
பைத்தியம் பிடித்தால் வைத்தியம் வேண்டாம்
பையத்தின்றால் பனையையும் தின்னலாம்
பொக்க வாயன் பொரிமாவை மெச்சுவான் 260
பொங்குங்காலம் புளி காய்க்கும்
பொய் சொன்ன வாய்க்கு போஜனமில்லை
பொடிக்கடைக்காரன் வாசனையறியான்
பொறுமையென்பது கடலினும் பெரிது

போனதை நினைப்பவன் புத்தி கெட்டவன்
பௌரணை விரதம் பலனைக் கொடுக்கும்
மங்கையர் தீட்டு கங்கையாற் போகும்
மச்சையழித்தால் குச்சுக்காகும்
மயிர் விலகினால் மலை விலகும்
மயிலின் இறகு மருந்துக்குதவும் 270
மரத்தை வைத்தவன் தண்ணீர் விடுவான்
மயிருள்ள சீமாட்டி வாரி முடிப்பாள்
மருந்தும் விருந்தும் மூன்று பொழுது
மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்
மலை பெரிதாயினும் சிற்றுளிக்கஞ்சும்
மல்லாந்துமிழ்ந்தால் மார்புமேல் விழும்
மறுசாதம் வெறுப்பவன் மாட்டுப்பிறப்பு
மனம்போலிருக்கும் மங்கிலியம்
மனமுரண்டுக்கு மருந்துண்டா
மனமுண்டானால் இடமுண்டு 280
மாவைத்தின்றால் பணியாரமில்லை
மாணிக்கம் விற்பவர் மண் சுமப்பாரா
மாமியார் மெச்சிய மருமகளில்லை

மானம் பெரிது பிராணன் சிறிது
மின்னுவதெல்லாம் பொன்னாகாது
மீனநாழிகை மேஷத்துக்காகும்
மூடப்பிள்ளையாயினும் மூத்தது வேண்டும்
முதலில் எடுத்துச் செலவு செய்யாதே
முயற்சியுடையான் இகழ்ச்சியடையான்
முள்ளூற்ற சீலையை மெள்ள இழு 290
முன்கை நீண்டால் முழங்கை நீளும்
மூக்குள்ள வரையிற் சளி போகாது
மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது
மூடற்றுப்போனால் முழுவதும் போகும்
மெத்தப்படிப்பவன் புத்தியில்லாதவன்
மேலோரறிவு கீழோர்க்கிராது
மொட்டைத்தலையில் பேன்சேராது
மோதிரமணிவது விரலுக்கழகு
மௌனமாயிருந்தால் கலகம் நாஸ்தி
யாழ்ப்பாணத்தில் பனைமர மிகுதி 300
யோகக்காரன் பல்லக்கேறுவான்

வட்டம் சுற்றி வழியே போ
வட்டியாசை முதலுக்குக்கேடு
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
வழிநடை வார்த்தை வாகனம் போல
வறுமையுள்ளோர்க்குப் பொறுமையுண்டு
வித்தைக்குச் சத்துரு விசனம் தரித்திரம்
விதிபோம் வழியே மதிபோகும்
விநாயக சஷ்டி விரதம் விசேஷம்
விருந்தில்லாச்சோறு மருந்தோடொக்கும் 310
விளக்கில் மொய்க்கும் விட்டிற் பறவை
விளையாட்டுப்பேச்சு வினையாய் முடியும்
விளையும் பயிரது முளையில் தெரியும்
வீட்டுக்கழகு விளக்கும் பிள்ளையும்
வெள்ளம் வருமுன் அணை போடு
வெற்றிபெறுவது கற்றவர்க்கழகு
வேலையைப்பார்த்துக் கூலி கொடு
வைகைத்தண்ணீர் வேகம் அதிகம்
வைத்தியர்க்கிடுவதை வாணியர்க்கிடு

183/220

ணே.

# வாழ் . . . பாக்கள்.

இராகம்-தோடி. தாளம்-ஆதி.

வந்தனம் வந்தன—வாழும் பால சிறுவர்கள்

அந்தமான செந்தமிழ்க்கு

அரசியேவுன் திருவடிக்கு — வந்தனம்.

கவனமாகச் சகலவுயிர்க்கும்

கருணைபுரியும் கடவுளடிக்கும்

அவனியாளும் ராஜர்க்கும்

அன்னை மேரி ராணிக்கும்—வந்த

எம்மையா தரித்திடும்

எண்ணும் எழுத்தும் விரித்திடும்

உண்மைக்கல்வி ஓதிவைக்கும்


உபாத்தியாய ரனைவருக்கும்—வந்த

வழங்கும் கல்வி யேறவே

வகுப்புத்தோறும் தேறவே

பழகும் அறிவு போதிக்கும்

பரீக்ஷையதி காரிக்கும்—வந்த




ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம்.